








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 2 இதழ் 5 12.02.2026






ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

உள்ளே.....

## பின்பற்ற வேண்டிய முத்துக்கள்

### 1. ஸ்ரீ சடாரியால் வரும் நல்வாழ்வு

**பலர் ஆழ்வார்களின் அருளிச்செயலைப் பயிலும் பாக்கிய மில்லாதவர். அவர்களிடம் எம்பெருமான் திருவுள்ளம் உகப்பதில்லையாம். அவர்களின் கதி என்ன? கருணாமூர்த்தியான நம்மாழ்வார் அவர்களை உய்விப்பதற்காக சடாரியின் வடிவு கொண்டாராம். அவர்கள் முடியிலும் ஸ்ரீ சடாரி எழுந்தருள்வதால் எம்பெருமானுக்கு இருந்த வெறுப்பு மாறி அவர்களும் நல்வாழ்வு பெறுகின்றார்களாம். இது தேசிகன் கண்ட ரஹஸ்யம்.**

***********************************************************************************************

***2.'தாயினும் சிறந்ததொரு தெய்வ மில்லை காயத்ரியினும் சிறந்த மந்த்ர முமில்லை; என்பது எல்லா வைதிக மதத்தினருடையவும் சிஷ் டா சாரத்திற்கு உகப்பானதுமான பொதுவான நம்பிக்கை. அவ்வாறே ஒவ்வொரு மதங்களுக்கும் சில ஸாரதமமான மந்த்ரங்கள் உவப்பானவை. விசிஷ் மிகவும் டாத்வைதிகளான ஸ்ரீவைஷ்ணவர் களின் உஜ்ஜீவிக்கைக்கு உபாயமாக இருப்பவை: 'திருவஷ்டா க்ஷரம்', 'த்வயம்''. 'சரமச்லோகம்'' என்பவையேயாகும். இவை மூன்றும் மிகவும் உயர்ந்தவை, இன்றி யமை யாதவை  நம் பூர்வா சார்யர்களால் நிர்ணயிக்கப்பட்டுள் ளவை. இம் மூன்றையும் தகுந்த ஆசார்யனை அடைந்து, அவர்கள் முகமாகவே உபதேச மூலம் பெற வேண்டியவை என்றும், ஆசார்ய னும் தகுந்த பாத்ர மறிந்தே இம்மந்த்ரங்களின் ரஹஸ்யார்த் தங்களை வெளியிட வேண்டுமென் றும், இம்மந்த்ரங்களை ரஹஸ்யங் களென்றும் நம் பூர்வாசார்யர்கள் நிர்ணயஞ் செய்துள்ளனர். இம் மூன்று மந்த்ரங்களையும் சேர்த்து ரஹஸ்ய த்ரயம்' என்னும் பொதுப் பெயரிட்டு அழைக்கப் படுகிறது. இவைகளின் ரஹஸ்யார்த்தங்களை ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் தமது மணிப்ரவாள நடையிலுள்ள 'ரஹஸ்ய த்ரய ஸாரம்' என்னும் நூலிலும், ஸ்ரீ பிள்ளை லோகா சார்யார் முமுக்ஷு ப்படி' என்னும் தமிழ் ஸூத்ரங்களாலாகிய நூலிலும் வெளியிட்டு, இந்நூல்களை ஆசார்யரின் மூலமாகப் பெற வேண்டிய காலக்ஷேப க்ரந்தங் களாக நிர்ணயித்துள்ளனர். கூரத்தாழ்வாரின் திருக்குமாரராய் அவதரித்த ஸ்ரீபராசரபட்டர் தமது 'அஷ்டச்லோகியில் இவைகளின் அர்த்த விசேஷங்களைச் சுருக்கமாக வெளியிட்டனர். ஸ்ரீவேதாந்த தேசி கர் 'திருமந்திரச் சுருக்கு,' 'த்வயச் சுருக்கு,' 'சரம ச்லோகச் சுருக்கு என முறையே 10-12-11 பாசுரங்களாலான   ப்ரபந்தங்களைச் செய்துள்ளனர்.***

## 3. நம்மாழ்வார்:

*திருவாய்மொழியின் முதற்பாசுரமான,*

*உயற்வறவுயர்நலம் உடையவன் யவனவன்*
*மயற்வற மதிநலம் அருளினன் யவனவன்*
*அயர்வறுமமரர்கள் அதிபதியவனவன்*
*துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே!*

*என்கிற இப்பாசுரம் திருவாய்மொழியின் ஆயிரம் பாசுரங்களுக்கும் ஸங்க்ரஹம் என்பர் ஆன்றோர். ஏனெனில், ஆழ்வார் இப்பிரபந்தத்தில் உபதேசித்த தத்வ, ஹித, புருஷார்த்தங்களை இப்பாசுரம் சுருக்கமாக குறிப்பிடுகிறது. முதல் அடியால் பரத்வம் கூறப்பட்டது. இரண்டாவது அடி, மதிநலம் அருளுகிறவன் என்று உபாயதவத்தை உரைத்தது. மூன்றாமடியில் அமரர்களதிபதி என்று நித்ய விபூதி ஆட்சியும் (ப்ராப்யாகாரத்வம்), நான்காவது அடியில் துயரறு சுடரடி என்றதால் உபாயத்வோபேயத்வங்களுக்கான திவ்யமங்கள் சேர்த்தியையும் பகர்ந்தார்.*

*****************************************************************

***4.ஆண்டாள்:-*** *திருப்பாவையின் முதல் பாசுரமான, 'மார்கழித் திங்கள் ...." திருப்பாவையின் முப்பது பாசுரங்களுக்கும் ஸங்க்ரஹம் என்பர் பெரியோர்.*

*"நாராயணனே" என்பதால் பரத்வம் - கிருஷ்ணனாக அவதரித்த நாராயணனே பரதேவதை என்பதையும், "மார்கழி நீராடப் போதுவீர்" என்று தலைசிறந்த உபாயமாகிற சரணாகதியே நாம் அநுஷ்டிக்கப் பட வேண்டியது என்பதையும், பறை தருவான் பரம புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தைத் தருவான் என்பதையும் உபதேசித்தாள் என்று ஸ்வாபதேசார்த்தம் கூறுவர் பெரியோர்.*

*****************************************************************

## 5. சரமஸ்லோகம் - அறிமுகம்

**பகவத் கீதையில் கடைசியில் கண்ணன் உபதேஸம் செய்த ஸ்லோகத்தை சரமஸ்லோகம் என்கிறோம். இது, அர்ஜுனனுக்காக சொன்னது; ஆனாலும், எல்லாருக்கும் ஏற்றது; எல்லா உலகத்தினரையும் காப்பதற்காகவே இதைக் கண்ணன் சொன்னான் என்று தேஸிகன் சாதிக்கிறார்.**

**சரம ஸ்லோகம் என்றால் கடைசி ஸ்லோகம் என்று அர்த்தம். முதலில் கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம் முதலியவற்றை உபதேஸம் செய்துவிட்டு கடைசியில் சரணாகதி ஆகிற உபாயத்துக்காக இதை உபதேஸம்**

**செய்தபடியால் இதை சரம ஸ்லோகம் என்பர்.**

**மொத்தத்தில், ப்ரசித்தமான சரமஸ்லோகங்கள் மூன்று உள்ளன -**

**1.ஸ்ரீவராஹப் பெருமான் அருளியது - ஸ்ரீவராஹபுராணத்தில் உள்ளது.**

**2. ஸ்ரீராமபிரான் அருளியது -ஸ்ரீமத்ராமாயணத்தில் உள்ளது;**

**3. ஸ்ரீகண்ணன் அருளியது -மஹாபாரதம் பகவத்கீதையில்.**

**************************************************************************

**6. சரமஸ்லோகத்தின் பொருள்கள்**

**பன்னிரண்டு பதங்கள் - பன்னிரண்டு விஷயங்கள்:**

**1. எம்பெருமானை அடைவதற்கான உபாயங்கள் பலவிதங்களாக ஸாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டு உள்ளன.**

**2. அவற்றைச் செய்ய முடியாதவராய், வேறு கதியற்று நாம் இருக்கிறோம்.**

**3. அப்படிப்பட்ட நமக்காக, தேவாதிதேவனான பெருமான், மிக எளியனாய் கருணையுடன் காத்துக்கொண்டு இருக்கிறான்.**

**4. அந்த எம்பெருமான் ஒருவனே நமக்கு ஆகிறான்.**

**5. வேறு உபாயங்களைச் செய்ய முடியாத நமக்கு, அவனே உபாயம் ஆகிறான்.**

**6. அவனிடம் சரணாகதி செய்ய வேண்டும்.**

**7. நம் சரணாகதியை ஏற்று நமக்குப் பலனளிக்க எம்பெருமான் கருணை கொள்கிறான்.**

**8. சரணாகதி செய்தவர், வேறொரு உபாயம் செய்ய வேண்டிய தேவையில்லை என்னும்படி பெருமாள் நம்மை நிறைவாளர் ஆக்குகிறான்.**

**9. நாம் அவனிடமிருந்து பலன் பெறத் தடையாக இருந்தவை, நாம் செய்த எண்ணற்ற பாபங்கள். அந்த எல்லா பாபங்களும் தொலைய வேண்டும்.**

**10. அந்த பாபங்களை எல்லாம் ஒழித்து, பெருமான் நமக்கு மோக்ஷம் தர எண்ணம் கொள்கிறான்.**

**11. எனவே அதைப்பற்றி நமக்கு இனி எதுவும் இல்லை.**

**12. இவ்விஷயத்தில் வேறு ஏதாவது குறை இருந்தாலும் அதை பெருமாள் சரியாக்கிக் கொள்வான் என்பதால், கவலை இல்லாமல் இருக்க நமக்கு வழி செய்கிறான்.**

**இப்படி, சரணாகதிக்கான தகுதி, சரணாகதி செய்ய வேண்டிய இடம், சரணாகதியை ஒரு வ்யாஜமாக செய்தல், செய்தபின் நிறைவு பெறுதல், பலனுக்குத் தடையான எண்ணற்ற பாபங்கள் தொலைதல், பலன் பெறுதலில் உறுதி, அதனால் கவலையற்று இருத்தல் முதலிய விஷயங்கள் சொல்லப்பட்டன. ஆக, ஒரு சரணாகதி ஸாஸ்த்ரமே, இந்த சரமஸ்லோகத்தில் அடங்கியுள்ளது. மஹாபாரதம், ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமம் முதலியவற்றில் உள்ள ப்ரபத்தி ஸாஸ்த்ரம் எல்லாம், இதன் விரிவே ஆகும்.**

**************************************************************************

**7.மூன்று வாக்யங்கள் - மூன்று விஷயங்கள்:**

**1. நாம் வேறு கதியற்றவராய் பெருமானிடம் சரணாகதி செய்ய வேண்டும். (இது அதிகாரிக்ருத்யம் - நாம் செய்ய வேண்டியது)**

**2. சரணாகதி செய்தவரைக் காக்கும் பொறுப்பை பெருமான் ஏற்றுக் கொண்டு, காக்க எண்ணம் கொள்ளுவான். (இது சரண்யக்ருத்யம் - பெருமான் செய்ய வேண்டியது)**

**3. பெருமானிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டதால், நாம் கவலையின்றி, அவனுக்கு கைங்கர்யம் செய்துகொண்டு காலம் கழிக்க வேண்டும். (இது உத்தரக்ருத்யம் சரணாகதிக்குப் பின்னர் நாம் செய்ய வேண்டியது)**

